அனுப்புநர்

திரு வி.கு. ஜெயக்கொடி, இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர் /
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில
ஆணையர்,
கே.கே. நகர், சென்னை – 600 078.

பெறுநர்

ஆணையர்,
இந்து சமய அறநிலையத் துறை,
எண் 119, நுங்கம்பாக்கம் ஹை ரோடு,
சென்னை 600 034.

ந. க. எண் 9974/ மா.தி.ந.3.1/2012, நாள் 27.12. 2012

அய்யா,

பொருள்: மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகம், சென்னை – மாற்றுத் திறனாளிகள் திருக்கோயில்களில் சிரமமின்றி வழிபாடு செய்திட வழங்கப்பட்ட அறிக்கையில் சில திருத்தங்கள் செய்திட வேண்டல் – தொடர்பு.

பார்வை: 1 ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை அவர்களின் கடிதம் ந.க எண் 17697/ 2006/ எண் 2, நாள் 5.12.2012.

2 தமிழ்நாடு உடல் ஊனமுற்றோர் சங்கங்களின் கூட்டமைப்பின் கடிதம், நாள் 18.12.2012.

பார்வை 1 இல் காணும் கடிதத்தில், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின் கீழ் உள்ள திருக்கோயில்களில், மாற்றுத் திறனாளிகள் எவ்வித சிரமமும் இன்றி வழிபாடு செய்வது குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் மாற்றுத் திறனாளிகள் கோவில்களில் சுவாமி தரிசனம் செய்வதற்கு, சிறப்பு வசதிகள் செய்து வழங்கியமைக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இக்கடிதத்தில், மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தப்படும் ஊன்றுகோல், செயற்கைக்கால், மற்றும் செயற்கை உபகரணங்களுடன், திருக்கோயில் கொடிமரம் வரை மட்டுமே செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது. சுவாமி தரிசனம் செய்திட மேற்காணும் உபகரணங்களுடன் செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை.

பெரும்பாலான மாற்றுத் திறனாளிகள், ஊன்றுகோல், செயற்கை கால் மற்றும் காலிபர் போன்ற உபகரணங்கள் உதவியுடன், பிறர் உதவி இன்றி சுயமாக அனைத்து இடங்களுக்கும் செல்ல இயலும். மாற்றுத் திறனாளிகள் சட்டம் 1995 மற்றும் தமிழ்நாடு அரசு மாற்றுத் திறனாளிகள் சம உரிமை, பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு சட்ட விதிகள் 2002 க்கு ஏற்பவும், இந்து சமய

அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின் கீழ் உள்ள திருக்கோயில்களில், மாற்றுத் திறனாளிகள் எவ்வித சிரமமும் இன்றி வழிபாடு செய்திட ஏதுவாக கிழ்காணும் நடை முறையினை மாற்றியமைத்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1) மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தும் ஊன்றுகோல், காலிபர் மற்றும் செயற்கை அவயங்கள் பலவும், பிளாஸ்டிக்கினால் தயார் செய்யப்படுபவை. எனவே, பிளாஸ்டிக் பயன்படுத்தி தயார் செய்யப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான உதவி உபகரணங்கள் உதவியுடன், மாற்றுத் திறனாளிகள் பொதுமக்கள் அனைவரும் இறைவனை தரிசிக்கும் இடம் வரை செல்ல அனுமதிக்கலாம்.

2) தோல் பொருட்களால் தயார் செய்யப்பட்ட காலிபர் மற்றும் செயற்கை அவயங்கள் அணிந்து வரும் மாற்றுத் திறனாளிகள் சுகாதாரம் பேனுவதற்காக அவற்றின் மீது துணியால் தயார் செய்யப்பட்ட முழு காலுரைகளை பயன்படுத்தி, பொதுமக்கள் அனைவரும் இறைவனை தரிசிக்கும் இடம் வரை செல்ல அனுமதிக்கலாம்.

3) அனைத்து திருக்கோயில்களிலும், மாற்றுத் திறனாளிகள் பயன்பாட்டிற்கு என, துணியால் தயார் செய்யப்பட்ட முழு காலுரைகளை பல அளவுகளில், மாற்றுத் திறனாளிகள் வருகைக்கு ஏற்ப தயார் நிலையில் வைத்திருக்க அறிவுரை வழங்கலாம்.

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின் கீழ் உள்ள திருக்கோயில்களில், ஏற்கனவே தாங்கள் செய்துள்ள ஏற்பாட்டுடன் மேற்கூறிய வசதிகளையும் செய்து மாற்றுத் திறனாளிகள் சுவாமியை தரிசனம் செய்திட உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

Y4

முதன்மைச் செயலாளர் /
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர்,

நகல்

1) அரசு செயலாளர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 9.

2) அரசு செயலாளர்,
தமிழ் வளர்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை –9.

3) செயலாளர், 3) தமிழ்நாடு உடல் ஊனமுற்றோர் சங்கங்களின் கூட்டமைப்பு, ~~சென்னை~~
No. 21AA ஏரிக்கரை சாலை கோட்டூர், சென்னை -85,